திராவிடன்

ஆசிரியர் : என். வி. என்.

வெற்றிவாகை சூடிய வீரர்



தோழர். ப. உ. சண்முகம்

6—7—63
8 பக்கங்கள்

வார இதழ்

16 காசு.

தலையங்கம்

மலர். 16. 6—7—63 மாலை 46

திருவண்ணாமலை தீர்ப்பளித்தது!

[என். வி. என்.]

இந்தியத் துணைக்கண்டமும் சிறப்பாகத் தமிழகமும், மிக ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த திருவண்ணாமலைத் தொகுதி இடைத்தேர்தல் தி. மு. கழகத்துக்கு மிக வெற்றிகரமான முடிவை அளித்துள்ளது.

பொதுவாக இந்தத் தேர்தல், நாட்டு மக்கள் மத்தியில் மிகப் பெரும் பரபரப்பையும் ஆவலையும் உண்டாக்கிவிட்டிருந்தது.

அதற்குக் காரணம், இந்த இடைத்தேர்தலில் ஆளும்கட்சியான காங்கிரஸ் கட்சி, மேற்கொண்ட அட்டூழியங்களும், ஜனநாயக விரோதச் செயல்களும் திருவண்ணாமலைத் தொகுதி மக்களின் மனதில் மட்டுமல்லாமல், தென்னக மக்களின் மனதிலேயே பெரும் அரசியல் கொந்தளிப்பை உண்டாக்கிவிட்டன!

படு இடைத்தேர்தல் என்றாலே ஆளும்கட்சிதான் வெற்றிபெறும் என்று இருந்த நிலைமையை இந்தியத் துணைக்கண்டத்திலேயே திராவிட முன்னேற்றக் கழகம்தான் மாற்றிக்காட்டியது.

பொதுத்தேர்தலுக்குப் பிறகு தமிழகத்தில் பாராளுமன்றத்துக்கு ஒரு இடைத்தேர்தலும், சட்டமன்றத்துக்கு 3 இடைத்தேர்தல்களும் நடைபெற்றன.

திருச்செங்கோடு தொகுதியில் இருந்து பாராளுமன்றத்திற்கு சென்ற ஆண்டு நடைபெற்ற இடைத்தேர்தலும்—அதில் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு கிடைத்த மகத்தான வெற்றியும் நாட்டு மக்கள் மனதில் என்றும் பசுமையாக இருக்கும்.

திருச்செங்கோடு தொகுதியில், காமராசரும் அவரைச் சேர்ந்த மற்ற தமிழக அமைச்சர்களும், போதாக்குறைக்குமத்திய அமைச்சர்களும் முகாம் அடித்து, பணம், பதவி, பயமுறுத்தல் ஆகியவற்றைத் துணைக்கொண்டு ஆடிய வெறியாட்டம் சகிக்க முடியாத ஒன்றாகும்!

நமது ஒப்பற்ற தலைவர் அறிஞர் அண்ணா அவர்களையும்—கழகத்தின் முன்னணித் தோழர்களையும் சிறைக்குள் அடைத்துவிட்டு திருச்செங்கோடு தொகுதியில் காமராசர் "பண தேவதைகளும் அதிகார மோகினிகளும்" புடைசூழ பவனி வந்து, முன்னேற்றக் கழகத்தை முறியடித்துக் காட்டுவேன் என்று சபதம் செய்தார்!

சிறைக்கு வெளியில் இருந்த கழகத் தலைவர்கள் அமைதி காத்து அரும்பணியாற்றி திருச்செங்கோடு தேர்தலில் அறிஞர் அண்ணா அவர்களுக்கு வெற்றிச் செய்தியைப் பரிசாகப் பெற்றுத் தந்தனர்.

அதையடுத்து தமிழகத்தில் நாங்குனேரி—போடி நாயகனூர் ஆகிய இடங்களில் இடைத் தேர்தல்கள் நடைபெற்றன.

நாங்குநேரி தொகுதியில் காங்கிரஸ் கட்சியும் — சுதந்திரா கட்சியும் போட்டியிட்டன. தி. மு. கழகம் சுதந்திரா கட்சிக்கு ஆதரவளித்தது.

போடிநாயகனூரில் காங்கி,ஸ் கட்சி வேட்பாளரும்—சுயேச்சை வேட்பாளரும் போட்டியிட்டனர். தி. மு. கழகம் சுயேச்சை வேட்பாளருக்கு ஆதரவு அளித்தது.

கழகம் நேரடியாக ஈடுபடாத இந்தத் தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி தன்னுடைய வழக்கமான ஜனநாயக விரோதச் செயல்களை நடமாடவிட்டது. காங்கிரசின் பணபலமும்—பதவிபலமும்—யதேச்சாதிகார வெறியும் கட்டவிழ்த்து விடப்பட்டன. கேட்பாரில்லாத காரணத்தால் அந்தத் தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி கண்ணை மூடிக்கொண்டு தேர்தல் விளையாட்டுக்களில் ஈடுபட்டது. ஆகவே காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளர்கள் வெற்றி பெற வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

ஆனால் திருவண்ணாமலைத் தொகுதியில் கழகமும் காங்கிரசும் நேரடியாகப் போட்டியிட்டன. அங்கே நடைபெற்ற மிகக் கடுமையான போட்டியில் கழக வேட்பாளர் ப. உ. சண்முகம் அவர்கள் வெற்றி பெற்றுள்ளார்.

பொதுத் தேர்தலுக்குப் பிறகு காங்கிரஸ் கட்சியுடன் நேரடியாகக் கழகம் போட்டியிட்ட இடைத்தேர்தல்கள் இரண்டு!

பாராளுமன்ற இடைத்தேர்தல் ஒன்று, சட்டமன்ற இடைத்தேர்தல் ஒன்று.

இந்த இரண்டு நேரடிப் போட்டியிலும் கழகமே வெற்றிக் கொடி நாட்டியது!

பாராளுமன்றத்தில் ஏழு இடங்களைப் பெற்றிருந்த கழகம் திருச்செங்கோடு வெற்றிக்குப்பிறகு தனது எண்ணிக்கையை எட்டாக உயர்த்திக்கொண்டது! 8

சட்டமன்றத்தில் 50 இடங்களைப் பெற்றிருந்த கழகம் திருவண்ணாமலை வெற்றிக்குப்பிறகு தனது எண்ணிக்கையை 51 ஆக உயர்த்திக்கொண்டது!

ஆக, பொதுத்தேர்தலுக்குப் பிறகு தி. மு. கழகம் வளருகின்ற எதிர்க்கட்சியாக வெற்றி முரசு கொட்டுகிறது. காங்கிரஸ் கரைகின்ற கட்சியாக மாறிக்கொண்டே வருகின்றது.

அதுமட்டுமல்ல. நடைபெற்று முடிந்த இடைத்தேர்தல்களில் மற்ற எதிர்க்கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சி, தமிழரசுக் கழகம், திராவிடர் கழகம், தமிழ் தேசியக் கட்சி ஆகியவை காங்கிரசின் துரோகச் செயலுக்குத் துணைபோயின!

அந்தக் கட்சிகளுக்குத் தி. மு. கழகத்தின்மீது வயிற்றெரிச்சல் இருந்தால் அதற்காக, எதிர்காலத்தில் இந்தக் கட்சிகளையே அழிக்க இருக்கும் காங்கிரஸ் கட்சிக்குத் துணை போவதென்பது தங்களைத் தாங்களே அழித்துக்கொள்ளும் நிலைக்கொப்பாகும்!

இத்தனை கட்சிகள் ஒன்று சேர்ந்தாலும் கழகத்தை அசைக்கமுடியாது என்பதைத்தான் திருவண்ணாமலைத் தேர்தலில் பொதுமக்கள் அக்கட்சிகளுக்குப் புத்திபுகட்டும் வகையில் நல்ல முடிவைத் தந்திருக்கிறார்கள்.

இதே காங்கிரஸ் சர்க்கார் கம்யூனிஸ்டுகளுக்கோ மற்ற கட்சிகளுக்கோ கொடுமை புரியும்போது, அவைகளுக்காகப் போராடக் கூடிய ஒரே கட்சி தி. மு. க.தான் என்பதை அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக்காட்டியுள்ளதை அக்கட்சிகள் தங்கள் புத்தியில் பதியவைத்துக்கொண்டு இனியாகிலும் நல்ல ஜனநாயகப் பண்புடன் இயங்க முயற்சி செய்யவேண்டும்! அப்படியில்லாவிட்டால் அக்கட்சிகளுக்கு நாட்டில் இடமில்லாமல் போய்விடும் என்பதைத்தான் கழக வெற்றி எடுத்துக்கூறுகிறது!

திருவண்ணாமலையில் கழகம் பெற்ற வெற்றி நாட்டுப் பிரிவினைக்கு மக்கள் தரும் ஆதரவைக் குறிக்காது என்றும் சிலர் கூறுகிறார்கள்.

திருவண்ணாமலையில் பேசிய காமராசர் முதற்கொண்டு, மற்ற காங்கிரஸ்காரர்களும், அவர்களுக்குத் துணைநின்ற மற்ற உதிரிக் கட்சியினரும் மூலைக்கு மூலை நாட்டுப் பிரிவினையை எதிர்த்துப் பேசினர்!

அவர்களது பேச்சை மக்கள் ஏற்கவில்லை. திருவண்ணாமலை மக்கள் தி. மு. கழகத்தை ஆதரிப்பதன் மூலம் பிரிவினை எதிர்ப்புப் பிரசாரத்தை முறியடித்துக் காட்டிவிட்டனர். இந்த தெளிவான உண்மை இன்னும் சிலருக்குப் புரியவில்லை என்றால் அவர்களுக்காக நாம் மிகவும் பரிதாபப்படுவதைத் தவிர வேறு வழியில்லை!

கழகத்தை அடக்க சர்க்கார் பல பயங்கர சட்டங்களைக் கொண்டுவரும் இந்த நேரத்திலும் மக்கள் கழகத்தின் கையை பலப்படுத்துகிறார்கள் என்றால் அதில் பொதிந்துள்ள அரசியல் உண்மையைப் புரிந்துகொள்ள முடியாதவர்களைப்பற்றி நாம் சிறிதும் கவலைப்படத் தேவையில்லை.

திருவண்ணாமலையில் கழகம் வெற்றி பெற்றதென்றால் அது சாமான்யமாகக் கிடைத்த வெற்றியல்ல!

கழகம் விடுத்த வேண்டுகோளை வாக்காளர் பெருமக்கள் நடுநிலையில் நின்று சிந்தித்து காங்கிரசின் பணபலம், பதவி பலத்தைத் துச்சமென மதித்து கழகத்திற்கு வெற்றி தேடித்தந்துள்ளனர்—அவர்களுக்கு நமது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருவண்ணாமலையில் கழகத் தோழர்கள் தங்கள் இன்னுயிரைப் பணயம்வைத்து, இரவு பகல் கண்ணுறங்காமல், காங்கிரசாரின் கணக்கற்ற தொல்லைகளைச் சகித்துக்கொண்டு பணியாற்றி, இந்த வெற்றியைத் தேடித்தந்துள்ளனர்—அவர்களுக்கு நமது நன்றியையும் பாராட்டினையும் உரித்தாக்குகிறோம்.

கழகத்திற்குத் தங்களது ஆதரவை நல்கிய சுதந்திரா கட்சி, முஸ்லீம் லீக் கட்சியினருக்கும் நமது மனமார்ந்த நன்றியறிதலை உரித்தாக்குகிறோம்.

கழகத்திற்கு வெற்றி தேடித்தந்து வாகைசூடிய தோழர் ப. உ. சண்முகம் அவர்களை மனமார நாம் பாராட்டுவதோடு, சட்டமன்றத்தில் அவரது பணி கழகத்திற்கு மேலும் சிறப்பினை உண்டாக்கும் வகையில் அமைய வேண்டுமென்று விரும்புகிறோம்.

நமக்கெல்லாம் அவ்வப்போது அறிவுரைகூறி, இருளிலிருந்து ஒளி உலகத்துக்கு வழி நடத்திச்செல்லும், திராவிடத்தின் வழிகாட்டி அறிஞர் அண்ணா அவர்களுக்கு, திருவண்ணாமலை வெற்றியைக் காணிக்கையாக்குவதில் நாம் பெருமிதம் கொள்கிறோம்.

கழக வெற்றிக்கு உழைத்த அனைவரையும் மீண்டும் ஒருமுறை பாராட்டுவதுடன் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி செலுத்திக்கொள்கிறோம்.

வாழ்க அண்ணா! வளர்க தி. மு. க.!

திரை விலகியது! தீபம் தெரிந்தது!

என்.வி.என். சோமு பி.ஏ.

திருவண்ணுமலை இடைத் தேர்தலில் கழகம் வெற்றி பெற்றதற்குக் காரணம் பணம்தான் என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார், காங்கிரஸ் வேட்பாளர் பத்ராசலம் அவர்கள்!

தண்ணீருக்குள்ளே வாழும் முதலை, தாகத்தைத் தணித்துக் கொள்ள சிறிது நீர் பருகும் மனிதனைப் பார்த்து, நீயும் தண்ணீரை உபயோகிக்கிருய் என்று கூறுவதற்கொப்ப இருக்கிறது காங்கிரஸ் வேட்பாளரின் வாதம்!

தேர்தல் காலங்களில் காங்கிரஸ் கட்சி எப்படி பணத்தைச் செலவிடுகிறது என்பதற்கு, நாம் வேறு வேறு நிகழ்ச்சிகளைத் தேடி ஓடவேண்டியதில்லை — திருவண்ணுமலை தேர்தலில் காமராசர் பேசிய பேச்சும், த. நா. கா. க. தலைவரின் அறிக்கையுமே போதுமான சான்றுகளாகும்;

ஒவ்வொரு காங்கிரஸ் கமிட்டியும் கார், அல்லது பணத்தோடு திருவண்ணுமலைக்கு வரவேண்டும் என்று காங்கிரஸ் கமிட்டிகளுக்கு, த. நா. கா. க. தலைவர் அனுப்பிய ரகசிய சுற்றறிக்கை ஒன்றே போதும், காங்கிரசாரின் மிதமிஞ்சிய பணபலத்தை எடுத்துக்காட்ட!

அதுமட்டுமல்ல தமிழகத்தின் 'தேர்தல்புலி' என்று காங்கிரஸ்காரர்களால் வர்ணிக்கப்படும் காமராசர் அவர்கள் ஏதோ ஒரு கூட்டத்தில் பேசுகையில் கடைசியில் கத்தையை அவிழ்க்க வேண்டியதுதான் என்றுகூடப் பேசினராம்!

இப்படி காங்கிரஸ் மலைமலையாகப் பணக்குவியல்களை வைத்துக்கொண்டு தேர்தலை நடத்தியது. நாம் அவசியச் செலவுகளுக்கு மட்டும் உண்டியல் ஏந்தி, சிறப்புக்கூட்டங்களை நடத்தி பணவசூல் செய்து தேர்தல் செலவைச் சரிக்கட்ட முயன்ருேம்!

காங்கிரசுக்கு வேலை செய்ய ஆலை அரசர்களும், பஸ் முதலாளிகளும், மிட்டா-மிராசுகளும் மோட்டார் படைகள் புடைசூழ திருவண்ணுமலையில் முகாமடித்தனர்!

நம்முடைய தொண்டர்கள் எவ்வளவோ சிரமங்களுக்கிடையில், கால் நடையாகவும், பஸ், ரயில்களிலும் திருவண்ணுமலை சென்று பசி, தூக்கம் பாராது பணியாற்றினர்கள்.

காங்கிரஸ்காரர்கள் கொண்டு வந்ததைப்போல் மோட்டார்களையோ பணமூட்டைகளையோ, நமது தொண்டர்கள் கொண்டு செல்லவில்லை!

மாநில நிதியமைச்சர் பக்தவத்சலம் அவர்களே ஒருமுறை கூறியுள்ளார், கழகத் தொண்டர்கள் கட்டுச்சோற்று மூட்டையுடன் வந்து கட்டுப்பாடுடன் கடமையாற்றுவதில் வல்லவர்கள் என்று!

உண்மை இப்படியிருக்க காங்கிரஸ் வேட்பாளர் அவர்கள், முழுப் பூசணிக்காயையும் இலைச் சோற்றில் மறைப்பதற்கு முயன்றிருக்கிருர்!

தி.மு.கழகத்தை திருவண்ணுமலையில் தோற்கடிக்க காங்கிரஸ்காரர்கள் எவ்வளவு அநீதிகளைச் செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்திருக்கின்றனர்!

ஒரு மந்திரி கூட தவருமல் திருவண்ணுமலையில் தங்கி வாக்காளர்களிடம் பயமுறுத்தியும் சில இடங்களில் பல்லிளித்தும் ஓட்டுக் கேட்டுள்ளனர்.

அமைச்சர்கள் தங்களது அதிகாரிகளையும், "ரதகஜ துரகபதாதிகளையும்" அழைத்துச் சென்று திருவண்ணுமலைத் தொகுதியையே அதிர வைத்தனர்!

போதாத குறைக்கு போலீஸ் அதிகாரிகள் அமைச்சர்களால் ஏவப்பட்டு கழகத்தோழர்களுக்கு அளித்த தொல்லைகள் சொல்லுந்தரமன்று!

இத்தனை தொல்லைகளையும் மீறி, காங்கிரஸ் கட்சியின்,

பணபலம்,
பதவி பலம்!
பாசீச வெறி!

ஆகியவற்றைக் கடந்து திருவண்ணுமலையில் தி. மு. கழகம் வெற்றி பெற்றுள்ள தென்ருல், அந்த வெற்றி மக்கள் மத்தியில் கழகத்துக்கு இருக்கும் பேராதரவையே எடுத்துக் காட்டுகிறது!

நிலைமை இவ்வாறிருக்க, உண்மைகளை மறைத்திட முயன்று, ஊருக்குப் புதிய தத்துவம் கூறுகிருர் காங்கிரஸ் வேட்பாளர்!

தேர்தல்களில் எதிர்க்கட்சிகளை தோற்கடிக்க காங்கிரஸ் அமைச்சர்கள் எவ்வெவ்வழிகளில் தங்களது பதவியைக் காட்டி பயமுறுத்தி பணம் பறிக்கிருர்கள் என்பது ஊர் சிரிக்கும் சங்கதியாகி விட்டது!

பல கம்பெனிகளில் இலட்சக் கணக்கில் காங்கிரஸ் தேர்தல் நிதிக்குப் பணம் பறித்திருக்கிருர்கள் அமைச்சர்கள்!

மத்திய சர்க்கார் அமைச்சர் மாளவியா அவர்களைப் பற்றிய செய்தியும்—அதற்காக அவர் பதவியைத் துறந்ததும், இதைப் போன்ற பிரச்சினைகளை மேலும் கிளறவேண்டாம் என்று காங்கிரஸ் தலைவர் சஞ்சீவையா வேண்டுகோள் விடுத்திருப்பதும் காங்கிரஸ் தேர்தல் நிதி பற்றி நாம் தெரிந்துகொள்ள போதுமானவைகளாகும்!

திருவண்ணுமலை காங்கிரஸ் வேட்பாளருக்கு இவைகள் தெரியாமல் இருக்கலாம்—காரணம் அவர் முழுக் காங்கிரஸ்காரர் அல்லவாம்!

தி.மு.கழகம் காங்சிரசைப் பணபலத்தால் வென்றது என்ருல் தமிழகம் மட்டுமல்ல—இந்தியத் துணைக்கண்டம் மட்டுமல்ல அகில உலகமே காங்கிரஸ் வேட்பாளரின் கூற்றைக் கேட்டு கை கொட்டிச் சிரிக்கும்!

தி. மு. கழகத்திடம்—
மோட்டார் படை இல்லை!
மக்கள் வரிசை உண்டு.
சீமான்கள் இல்லை!
சிறந்த உழைப்பாளர்கள் உண்டு!

ஆகவேதான் கழகம் காங்கிரசாரின் தடைகளைக் கடந்து—அவர்களுக்குத் துணை போன உதிரிக் கட்சிகளின் துரோகச் செயலைக் கடந்து வெற்றி முரசு கொட்டியது!

திருவண்ணுமலையில் தி. மு. கழகத் தீபத்தை மறைக்க காங்கிரசார் எல்லாவிதமான முயற்சிகளையும் மேற்கொண்டனர்!

பணப்புயல் வீசி தீபத்தை அணைக்க முயன்றது!

அதிகாரச் சூருவளி அடித்தது!

சர்வாதிகாரக் காற்று ஓங்காரமாக வீசியது!

காமராசர் தனது அகண்ட கைகளினுல் காங்கிரஸ் என்னும் திரையைக் கொண்டு தி. மு. க. தீபத்தை மறைக்க முயன்ருர்!

மக்கள் காங்கிரஸ் திரையை விலக்கினர்! தி. மு. க.வுக்கு வெற்றி அளித்தனர்!

திரை விலகியது! தீபம் தெரிந்தது!

O

அண்ணுவின் நன்றி

"திருவண்ணுமலைத் தொகுதி இடைத்தேர்தலில், முஸ்லிம் லீகினர் நமக்குப் பெரும் ஆதரவு தந்தார்கள்; வெற்றிக்கு உழைத்தார்கள்; அவர்களுக்கு என்னுடைய நன்றி.

வெற்றிக்கு அடிப்படையான முக்கிய அம்சம், தி. மு. கழகத்துடன் சுதந்திரா கட்சி கடுமையாகவும் ஒழுங்கான முறையிலும் பாடுபட்டதே ஆகும்.

இந்த இடைத்தேர்தலில் வெற்றிபெற உதவியதற்காக சுதந்தரா கட்சித் தலைவர் திரு. இராசகோபாலாச்சாரியார் அவர்களுக்கும், முஸ்லிம் லீக் தலைவர் காயிதேமில்லத் முகமது இஸ்மாயில் அவர்களுக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

"திருவண்ணுமலைத் தொகுதி இடைத்தேர்தலின்போது தி. மு. கழகத் தொண்டர்கள் பம்பரம்போல் சுழன்ருர்கள்! வண்டுகளைப்போல் பறந்தார்கள்! எறும்புகளைப்போல் ஊர்ந்தார்கள்! வெற்றிக்காக முழுமூச்சுடன் பாடுபட்டார்கள்!

கழக மேடைகளில் காங்கிரசுக்காரர்கள் கொடியேற்ற முயன்றபோதுகூட, தி. மு. க. தொண்டர்கள் பொறுமையாக இருந்தார்கள்—ஆத்திரம் கொள்ளவில்லை! அது எங்களுக்கு அதிக பலத்தைக் கொடுத்தது!"

—கோவை வெற்றி விழாவில் அண்ணு.

வாசகர்களுக்கு வேண்டுகோள்

அன்புடையீர்,

அச்சு இயந்திரக் கோளாறினுல் மீண்டும் இவ்வாரம் மட்டும் 8 பக்கங்களாக வெளியிடப்பட்டிருக்கிறது. அடுத்த வாரம் வழக்கம்போல 12 பக்கங்களாக வெளிவரும். வாசகர்கள் பொருத்தருளுக.

வணக்கம்.

நிர்வாகி—திராவிடன்.

மகிழ்ச்சிக் கடலில் மக்கள் தலைவர்!

திருவண்ணுமலை தேர்தல் முடிவை அறிந்துகொள்ள அனைவரும் ஆவலாக இருந்தார்கள். நானும் துடித்துக் கொண்டு இருந்தேன்.

அருமைத்தம்பி கருணுநிதியும், என். வி. நடராசனும் வெற்றிச் செய்தியை-மகிழ்ச்சி செய்தியைக் கொண்டு வந்தார்கள்.

அதை எண்ணி எண்ணி மகிழ்ந்தேன். மகிழ்ந்து கொண்டே இருக்கின்றேன். நான் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை.

மகிழ்ச்சியின் மிகுதியால் பேசமுடியவில்லை. திணறிக் கொண்டு இருக்கிறேன். மகிழ்ச்சி வந்து, வந்து என்னை சிரிக்கவைக்கிறது.

திருவண்ணுமலையில் காங்கிரசுக்கும், தி. மு. கழகத்துக்கும் பலப்பரீட்சை நடந்தது. தி. மு. கழகம் வெற்றி பெற்றுவிட்டது.

தேர்தலின்போது காங்கிரஸ்காரர்கள் செய்த சதி-சூழ்ச்சிகளை சொன்னுல் அது பாரத கதை ஆகிவிடும். நேரில் பார்த்தவர்களுக்குத்தான் கொடுமை தெரியும்;

காங்கிரஸ்காரர்கள் செய்த கொடுமைகளைச் சொல்ல என் வாய் கூசுகிறது. அவ்வளவு மட்டரகமாக நடந்து கொண்டார்கள்.

மந்திரிகள் முக்கால்வாசி பேருக்குமேல் திருவண்ணுமலையில்தான் சுற்றினுர்கள். ஓட்டுக்காக பஞ்சாயத்து தலைவர் ஒருவரை மந்திரி ஒருவர்தாஜா செய்தார். அவர் தோளில் கைபோட்டுக்கொண்டு வந்தார்.

அப்போது தி. மு. கழக சட்டமன்ற உறுப்பினர் கமலநாதன் அங்கு போனுர். பஞ்சாயத்து தலைவர் கையை பிடித்து இழுத்தார். இதனுல் குழப்பம் ஏற்பட்டது. போலீசார் வந்து அமைதி ஏற்படுத்தினுர்கள்.

தி. மு. கழக பொதுக்கூட்டங்களில் காங்கிரஸ் கட்சியினர் கொடியை கட்ட முயன்ருர்கள். மேடைகளில் ஏறி தோரணம்கூட கட்ட முயன்ருர்கள்.

கலவரம் உண்டாக்கி பீதியை ஏற்படுத்தினுர்கள். வாக்காளர்களை ஓட்டுச்சாவடிக்கு வரவிடாமல் தடுத்தார்கள்.

"பொறுத்தவர் பூமி ஆள்வார்; பொங்கினவர் கடலாள்வார்" என்பது போல நமது தொண்டர்கள் அமைதியாக பணி ஆற்றினுர்கள்.

திருவண்ணுமலை தேர்தல் பொறுப்பை, தம்பி கருணுநிதியிடமும், என். வி. நடராசனிடமும் ஒப்படைத்து விட்டு காஞ்சிபுரத்துக்குச் சென்றுவிட்டேன்.

திருவண்ணுமலையில் இருந்து வந்த செய்திகள் என்னை நடுங்க வைத்தன.

8 அணு, ஒரு ரூபாய்க்கு மதிப்பு இல்லை. சாதிகட்டுப்பாடு அத்து மீற, அதிகார வரம்புக்கு சாவுமணி அடித்து விட்டார்கள். திருவண்ணுமலை தொகுதி வாக்காளர்கள்.

அந்த ஒலி இன்னும் என் காதில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. உருட்டல் மிரட்டல்களுக்கு அஞ்சாது, திருவண்ணுமலை தொகுதி வாக்காளர்கள் தி. மு. கழகத்துக்கு கொடுத்த ஆதரவு பாராட்டத்தக்கது ஆகும்.

காங்கிரஸ் அதிகாரம் அடித்து நொறுக்கப்பட்டுவிட்டது. காங்கிரஸ் கொள்கையில் வலிவு இல்லை. காங்கிரஸ் சூழ்ச்சிகள் பலிக்கவில்லை.

தி. மு. கழகம் திட்டம் போட்டு வேலை செய்தது.

ப. உ. சண்முகம்மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை காமராசர் சூளுரையை உடைத்து எறிந்துவிட்டது.

தி. மு. கழக தொண்டர்கள் பம்பரம் போல் சுழன்று சுழன்று வந்தார்கள்; வண்டு போல் பறந்தார்கள்; எறும்பு போல் ஊர்ந்தார்கள். அவர்களை நான் பாராட்டுகிறேன்.

மற்றும் தி. மு. கழகத்துக்கு ஆதரவு கொடுத்த ராஜாஜி, காயிதேமில்லத் மகம்மது இஸ்மாயில் ஆகியவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவண்ணுமலையில் ஆணவம் தோற்றது. அன்பு—பண்பு வென்றது.

இந்த நேரத்தில், கருணுநிதியும், என். வி. நடராசனும் பெண்களாக இருந்து, நான் (அண்ணு) திருமணம் ஆகாத வாலிபனுக இருந்தால், அவர்களை கட்டித் தழுவி முத்தம் கொடுத்து இருப்பேன்.

அவ்வளவு மகிழ்ச்சியான சுவையான செய்தியை அவர்கள் எனக்குக் கொண்டுவந்தார்கள்.

—என்று 1—7—63 அன்று மாயவரத்தில் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் நினைவுமன்ற ஆண்டுவிழாக் கூட்டத்தில் அறிஞர் அண்ணு அவர்கள் குறிப்பிட்டார்கள். திருவண்ணுமலை வெற்றிச்செய்தி அறிந்ததும், இக்கூட்டம் வெற்றிக்கூட்டமாகவும் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கலைஞர் கருணுநிதி, என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன், கடலூர் வழக்கறிஞர் இளம்வழுதி, அம்பில் தருமலிங்கம், மன்னை நாராயணசாமி, அடைக்கலம் ஆகியோரும் பேசினர்.

o

வாழ்க மணமக்கள்!

மு. சண்முகம் - சண்பகவல்லி

தி.மு.க. தலைமை நிலையப் பொறுப்பாளரும், திராவிடன் வாசகர்களுக்கு அவ்வப்போது கருத்து விருந்து படைத்து வருபவருமான திரு மு. சண்முகம்—சண்பகவல்லி ஆகியோரின் திருமண விழா 30-6-63 அன்று சென்னையில் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்புடன் நடைபெற்றது. மண மக்களை வாழ்த்தி கலைஞர் மு.கருணுநிதி, ஆசிரியர் என்.வி.என், டாக்டர். சத்தியவாணி முத்து, காஞ்சிகல்யாணசுந்தரம், நீலநாராயணன், மற்றும் கழக முன்னணி வீரர்கள் வாழ்த்துரை வழங்கினர்.

மணமக்கள் சார்பில் டி. கே. கபாலி நன்றி நவின்ருர்.

மணமக்கள் எல்லா வளமும் பெற்று வாழக என்று வாழ்த்துகிருேம்.

கே.ஏ. கிருஷ்ணசாமி—புனிதவதி

——:——

தலைமைநிலையச் செயலாளர் கே.ஏ.மதியழகன் அவர்களது இளவலும், தி.மா. மு.க. முன்னணி வீரருமான திரு.கே.ஏ. கிருஷ்ணசாமி — புனிதவதி ஆகியோரின் திருமணவிழா 1-7-63 அன்று சூலூரில் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்புடன் நடைபெற்றது.

மணமக்களை வாழ்த்தி அறிஞர்அண்ணு, என். வி. நடராசன், சி. பி. சிற்றரசு, எ. கோவிந்தசாமி மற்றும் கழக முன்னணித் தோழர்கள் பேசினர். மணமகன் கே. ஏ. கிருஷ்ணசாமி நன்றி நவில விழா இனிது முடிவுற்றது.

மணமக்கள் எல்லா வளமும் பெற்று வாழ்க என்று வாழ்த்துகிருேம்.

கா. வேழவேந்தன் — பானுமதி

தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் கே. எம்.கண்ணபிரான் அவர்களது புதல்வி பானுமதிக்கும்—தி. மா. மு. கழகத் தோழர் கவிஞர் வேழவேந்தன் பி.ஏ,பி.எல். அவர்களுக்கும் 3-7-63 அன்று சென்னையில் அறிஞர்அண்ணு அவர்களின் சீரிய தலைமையில் திருமணவிழா நடைபெற்றது.

மணமக்களை வாழ்த்தி டாக்டர்.மு.வ, நாவலர் நெடுஞ்செழியன், கலைஞர் கருணுநிதி, ஆசிரியர் என்.வி.என், டாக்டர் சத்தியவாணிமுத்து, பன்மொழிப்புலவர் அப்பாதுரையார், பேராசிரியர் மயிலை-சிவமுத்து மற்றும் ஏராளமான கழகத் தோழர்களும், காங்கிரஸ் நண்பர்களும் பேசினர்.

மணமகன் வேழவேந்தன் நன்றி நவின்ருர். மணமக்கள் எல்லா வளமும் பெற்று வாழ்க என்று வாழ்த்துகிருேம்.

ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன்; அச்சிடுபவர், [illegible] —சோழு அச்சகம், 16, இப்ராகிம் சேட் தெரு, சென்னை-1